சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS No. 226/2021**

**நாள் : 07.12.2023**

**PW1 : பாலுச்சாமி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

**1)** நான் தாக்கல் செய்த 1934 ஆம் அண்டு பாக சாசனத்தில் குறிப்பிட்ட நான்கு எல்லைக்குள் 13 செண்ட் காலை எண்.685-ல்கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் சரிதான். மேற்படி சின்னிய கவுண்டரின் மக்கள்தான் ராமசாமி மற்றும் மற்றொரு சின்னிய கவுண்டர் என்றால் சரிதான். மேற்படி சின்னிய கவுண்டரின் மக்கள்தான் தங்கமணி மற்றும் ஜோதிமணி என்றால் சரிதான். சின்னிய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 6 ½ செண்ட் தங்கமணிக்கும், ஜோதிமணிக்கும் பாத்தியம் என்றால் தவறு. என் தாயார் 1-ம் வாதி, வாதிகளின் பெரியப்பா ராமசாமி, மனைவி மற்றும் மக்களிடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் 75 செண்ட்கள்தான் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி Ex.A1 ஆவணத்தில் 75 செண்ட் போக, வேறு விஸ்தீரணம் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்படவில்லை.

2) வாதிகளுக்கு வாரிசு அடிப்படையில் 6 ½ செண்ட் சட்டப்படி பாத்தியம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சமரசம் செய்த வழக்கின் தீர்ப்பாணையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வழக்குரை நகலை படித்து பார்த்தேன். வழக்குரையில் என்னென்ன ஆவணங்கள் குறிப்பிட்டிருந்தார்கள் என்றால் நினைவில்லை. எங்களுக்கு 685 நெம்பர் காலையில் Ex.A1 தவிர வேறு ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் உள்ளது. பூர்வீக சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 2 ஏக்கர் 82 செண்ட் உள்ளது. மேற்படி விஸ்தீரணமானது 1835/74 ஆவணத்தின்படி கருப்புசாமி கவுண்டருக்கு சி பாக சொத்தாக 2 ஏக்கர் 82 செண்டில் பொதுவில் 1.56 செண்ட்டும், அவருடைய மகன் முருகப்ப கவுண்டருக்கு 55 செண்ட்டும், கருப்பசாமி கவுண்டரின் மற்றொரு மகன் எனது தந்தைக்கு 15 ¾ செண்ட்டும், என் சித்தப்பா ராயப்ப கவுண்டருக்கு 55 செண்ட்டும் பிரிக்கப்படாத பொது சொத்தாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தைக்கு 685 நெ. காலையில் 15 ¾ செண்ட் மட்டும்தான் என்றால் சரிதான்.

3) இந்த தாவா பிரதிவாதிகளின் தாத்தா சின்னிய கவுண்டர், அவரது மகன் ராமசாமிகவுண்டர், மற்றொரு சின்னிய கவுண்டர் ஆகியோர் 430/1956 ஆவணப்படிபாகம் செய்து கொண்ட வகையில், சின்னிய கவுண்டருக்கும், ராமசாமிக்கும் ஏ பாக சொத்தாக க.ச.எண்.685 காலையில் 1 ஏக்கரும், பிரதிவாதிகளின் தந்தைக்கு பி பாக சொத்தாக 50 செண்டும் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என் தாயார் கிரையம் பெற்ற 75 செண்ட் 430/1956 ஆவணத்தின்படி, சின்னிய கவுண்டர் அவரது சொத்துக்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் எழுதாததால், சின்னிய கவுண்டருக்கு பொதுவில் பாத்தியப்பட்ட 50 செண்ட் பூமியில், 25 செண்ட்டை ராமசாமிக்கும், 25

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.12.07 17:46:50 +0530

செண்ட் மற்றொரு சின்னிய கவுண்டருக்கும் பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 430/1956 ஆவணப்படி பி பாக சொத்தாக ஒதுக்கப்பட்ட 50 செண்டும், வாரிசு அடிப்படையில் அவர்களுக்கு கிடைக்கப்படும் 25 செண்டும் கிடைக்கப்பெற்று, மொத்தம் 75 செண்ட் பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்து கொண்ட 13 செண்டும், 75 செண்டும் அவர்களுக்கு முறையாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அ.வ.எண்.99/2018-ல் பெற்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பானை சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ஆவணப்படியும், சட்டப்படியும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான்தான் ஏற்றுக்கொள்ளாமல், அதிகமான விஸ்தீரணம் எங்களுக்கு உள்ளதாக கூறி தவறாக வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.12.07 17:46:56 +05'30'

Subordinate Judge,
Avinashi.